28th February 1966]

There is no provision in the Act which lays down that the Board of Film Censors should consult the State Government concerned in the matter of framing rules and regulations regarding censorship.

திரு. மு. கருணாநிதி : அமைச்சர் அவர்களே சினிமாவுக்குப் போகிற பழக்கத்தை விட்டு விட்டால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் ' கார்த்திகை தீபம் ' என்ற படத்தைப் பார்த்து விட்டு, அந்தப் படத்தை "அடல்ட்ஸ்"-க்கு மட்டும் என்று தணிக்கையாளர் போட்டதைப் பற்றிக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல படங்களை யாவது அமைச்சர் சிபாரிசு செய்கிறார்களா ? சினிமாவுக்குப் போவதே தவறு என்று அவர்கள் கூறுவது சரியான வாதமாகுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பொதுவாக, தவறாமல் தினந் தோறும் சினிமாவுக்குப் போகிறவர்கள் இருக்கிறார்கள் ; வாரந்தோறும், மாதந்தோறும் சினிமாவுக்குப் போகிறவர்கள் இருக்கிறார்கள் ; நான் சாதாரணமாக சினிமாவுக்குப் போவது கிடையாது. யாராவது ரொம்ப வற்புறுத்திக் கூப்பிட்டால் நான் சென்று பார்த்து என்னுடைய கருத்தைக் கூறுவதுண்டு.

திரு. கே. ஏ. மதியழகன் : சினிமாவுக்குப் போகக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னது அவருடைய சொந்தக் கருத்தா அல்லது அமைச்சரவையினுடைய கருத்தா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த மாதிரி ஆபாசமான படங்கள் வரும்போது நிறையக் கூட்டம் சேருகிறது. ஆகையினால் அதற்குப் போகாமல் இருந்தால் உத்தமம். பொதுவாக சினிமாவுக்குப் போகாமல் இருப்பது நல்லது ; அதிலும் கண்டிப்பாக இந்த மாதிரிப் படங்களுக்குப் போகாமல் இருப்பது உத்தமம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் திரைப் படங்களைத் தணிக்கை செய்ய தமிழ் நாட்டில் ஒரு போர்டு இருக்கிறது. அந்தப் போன்று தமிழகத்திற்கு வரும் பிற நாட்டுத் திரைப்படங்களையும் அந்த போர்டைக் கொண்டு தணிக்கை செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

Mr. SPEAKER : 'Sanctioning of cinematograph films for exhibition' comes under the Union List and not under the State List. Unless the Constitution is amended, I do not think the State Government can control it. But they can prohibit the exhibition of such posters outside, as it leads to accidents.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படி இருந்தாலும் மத்திய சென்சார் போர்டுக்கு நமது அரசாங்கம் எழுதி அங்கிருந்து ஒருவர் வந்து பார்த்து தடை விதிக்கலாம் என்று விதி இருக்கிறது. அதையாவது கையாளலாம் அல்லவா?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : I will consider that.

மரக்காணம் பகுதியிலுள்ள நிலங்கள்.

* 133 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் பகுதியில் காடுகளாக இல்லாத சில ஏக்கர் நிலங்கள் வன இலாகாவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : (அ) ஆம்.
(இ) இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : காடு என்ற பெயரால் நிறைய நிலங்கள் அந்த கடற்கரைப் பகுதியில் இருக்கின்றன. ஆடு, மாடுகள் கூட போகமுடியாத நிலையில் அவைகளை பட்டியில் அடைத்து விடுகிறார்கள். இந்த நிலங்களை விவசாயத்திற்கு கொடுக்காவிட்டாலும் ஆடு, மாடுகளை ஓட்டவாவது, அவைகளைப் பட்டியில் அடைக்காமல் இருக்கவாவது, அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் சவுக்கு மரங்களும், யூகலிப்டஸ் ஹைற ப்ரீட் மரங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுகள் கழித்து ஆடு, மாடுகளை மேய விடுவார்கள் ; அதற்கு ஆட்சேபம் இருக்காது.

கரி உற்பத்திக்கு மரம் வெட்டல்

*** 134 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குற்றாலத்திலுள்ள தெற்கு மலை எஸ்டேட்டில் மரங்களை வெட்டி, எரித்து, கரிக்காக (coal) புதைக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்:
(அ), & (இ) தெற்குமலை எஸ்டேட்டில் 15 எக்கர் பரப்பில் இருந்த மரங்களை அறவெட்டு முறையில் (clear felling system) வெட்டி எடுத்துக் கொள்ள அந்த எஸ்டேட்டின் சொந்தக்காரருக்குத் திருநெல்வேலி கலெக்டர் 1964, பிப்ரவரியில் அனுமதி வழங்கினார். அனுமதி வழங்கப்பட்ட நிலத்தில் இருந்த மரங்களை எஸ்டேட் உரிமையாளர் அறவெட்டு முறையில் வெட்டி எடுத்துக் கொண்டார். அந்த எஸ்டேட்டிலிருந்து எடுத்துச் செல்ல முடியாத கரடுமுரடான மரத்திம்மைகள், மொக்கையான அடிக்கட்டைகள், விறகு ஆகியவை, மரங்களை அறுத்து எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட பகுதிக்குள்ளேயே சுட்டுக் கரியாக்கப்பட்டன. மரங்களை அறுத்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட 15 எக்கர் பரப்புக்கு வெளியே எவ்விடத்திலும் கரி சுடப்படவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த குற்றாலம் மலை மேல் உள்ள மரங்களை வெட்டியதால் மழை வீஸனில் மழை பெய்யாமல் குற்றாலத்தின் மகிமையே கெட்டு விட்டது என்று அந்தப் பிராந்தியத்தில் சொல்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது அங்கு மரங்களை வெட்டி கரி எடுப்பதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : குற்றாலத்திலே மேலே உள்ள மரங்களை எல்லாம் வெட்டி விட்டார்கள் என்பது சரியல்ல. நான் கொடுத்துள்ள தகவல்படி 15 எக்கர்களில் வெட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்டதில் அதை வெட்டி எடுத்து கொஞ்சம் கரி சுட ஏற்பாடு செய்து விட்டார்கள். ஆனால், இப்போது கரி சுடுவதற்குக்கூட அனுமதி வேண்டுமென்ற ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக கரி சுடுவது என்று சொன்னாலும் கூட அவர்கள் அந்த அனுமதி இல்லாமல் செய்ய முடியாத ஒரு நிலையில் அமெண்ட்மெண்ட் ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது. அது அநேகமாக கூடிய சீக்கிரத்தில் வந்து விடும்.

திரு. சா. கணேசன் : இதேமாதிரி குற்றாலம் போன்ற மலைப் பிராந்தியங்களில் உள்ள மரங்களை—நீலகிரியில் எல்லாம் அனுமதி கொடுக்கப்பட்டு முழுக்க வெட்டப்பட்டு விட்டன—அதேமாதிரி குற்றாலத்திலும் தொடங்கப்பட்டிருக்கிறது. முழுக்க போய் விட்டது என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட தெற்கு மலைப் பகுதியில் சில பகுதிகள் தனிப்பட்டவர்களுக்கும்